ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/10 - 2022 ජූලි මස 12 වැනි අඟහරුවාදා- 2022.07.12

*2288/10 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### துணை விதிகள்

அறனாயக பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 69/ 126 வது உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய அந்தச் சட்டத்தின் 122 வது உறுப்புரையின் மூலம் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அறனாயக பிரதேச சபையினால் ஆக்கப்பட்டுள்ள மற்றும் 2019.05.25 ஆம் திகதி நடாத்தப்பட்ட சபையின் சபைப் பொதுக் கூட்டத்தில் 22 ஆம் இலக்க முன் மொழிவு மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள இங்கு கிழே குறிப்பிடப்படும் துணை விதிகள் 1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க மாகாண சபை (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 வது உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச சபைச் சட்டத்தின் 123 (1) வது உறுப்புரைக்கு ஏற்ப சப்பிரகமுவ மாகாண சபை அரசாங்க அதிபர் டிகிரிகொப்பேகடுவ எனும் என்னால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது எனவும், இந்த அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் தினத்திலிருந்து அந்தத்துணை விதிகள் அறனாயக பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அமுலாகும் எனவும் இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

**டிகிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

*சப்பிரகமுவ மாகாண சபை,*
*2022, மே 31.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை

### அறனாயக பிரதேச சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் காணி உப பிரிவாக்கல் மேற்கொள்ளலை நிருவகித்தல் பற்றிய துணை விதிகள்

(1) இந்த துணை விதிகளை மேற்கொள்வதற்கான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 126 (vi) வது உப உறுப்புரையின் கீழ் அதிகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

(2) இந்தத் துணை விதிகள் சப்பிரகமுவ மாகாண அறனாயக பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் அமுல் படுத்தப்படும் அதிகாரப் பிரதேசத்தினுள் காணி உப பிரிவாக்கல், உப பிரிவு மேற்கொள்ளப்பட்ட காணிப் பிரிவுகளை அபிவிருத்தி செய்தல், நடாத்திச் செல்லலுக்கு அறிவுரை வழங்கல், நிருவகித்தல் மற்றும் பராமரிப்புச் செய்தல் அதற்குத் துணையாகும் விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக விதிக்கப்பட்டுள்ளது.

(3) இந்த துணை விதிகள் அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் காணி உப பிரிவாக்கல் நிர்வகித்தல் பற்றிய துணை விதிகள் என அறிமுகமாகின்றது.

(4) சப்பிரகமுவ மாகாண அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் யாதாயினும் காணி ஒன்றை உப பிரிவாக்கும் எல்லா நபர்களும் அதற்கு உரிய உப பிரிவாக்கும் திட்டத்தின் அனுமதிக்காக முன்வைப்பதற்கு முன்னர், அந்த இடக்காணி அமைவிடம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தான பிரதேச சபை ஒன்றில், அந்த விடயம் தொடர்பாக பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) மேலே 4 ஆவது உறுப்புரையின் கீழ் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் போது 1 ஆவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தின் கீழ் அதற்காக விண்ணப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) இந்த துணை விதிகளின் கீழ் பதிவு செய்து கொள்ளும் விடயமாக, உப பிரிவாக்கலுக்கு உரிய சொத்துக்கான அபிவிருத்தி உத்தரவுப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக, செய்ய வேண்டிய அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக, அறனாயக பிரதேச சபையின் தொழில்நுட்ப அதிகாரியினால் மேற்கொள்ளப்படும் உத்தேச செலவு மதிப்பீட்டின் மூலமாக மதிப்பீட்டு பெறுமதியின் 50%க்கு சமமான பணத்தொகை முற்பணம் எனும் ரீதியில் விண்ணப்பதாரியினால் பிரதேச சபையில் முற்பணவைப்பாக செலுத்தப்பட வேண்டும்.

(7) அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 1915 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் செயற்படுத்தப்படும் அதிகாரப் பிரதேசத்தினுள் காணி உப பிரிவுக்கான எல்லாத் திட்டங்களும் 1915 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் அந்த துணை விதியின் கீழ் அனுமதி பெற்ற திட்டமொன்றாதல் வேண்டும்.

(8) அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் செயற்படும் அதிகாரப் பிரதேசத்தினுள் காணி உப பிரிவாக்கஞ் செய்யும் போது, உப பிரிவாக்கல் செய்யப்பட்ட அனுமதி பெற்ற திட்டத்திற்கு ஏற்ப, சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதமாக, 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மற்றும் இந்த துணை விதிகளின் கீழ் அநுகூலச் சான்றுப் பத்திரம் ஒன்று தலைவரினால் பெற்றுக் கொள்ளும் வரை, உப பிரிவாக்கஞ் செய்யப்பட்ட ஏதேனும் காணித்துண்டு ஒன்றை விற்றல், அகற்றுதல், அல்லது விற்பனைக்குப் பகிரங்கமாக விளம்பரம் செய்தல் எவ-ரேனும் ஒருவரால் அல்லது மேற்கொள்ளல் ஆகாது.

(9) அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 1915 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கு உரிய அதிகாரப் பிரதேசத்தினுள் விற்பனைக்காக, காணி உப பிரிவாக்கப்பட்ட ஒரு ஹெக்டயாருக்கு அதிக அளவுடைய காணி தொடர்பாக காணி உப பிரவாக்கப்பட்ட குறைந்தளவு காணித்துண்டு 40 பேர்ச்சுக்கு குறைவாகக் காணப்படின் அந்தக் காணியின், முழுப் பிரமாண அளவில் உள்ளக பாதைகளுக்காக ஒதுக்கப்பட்ட அளவை கைவிட்டு, எஞ்சிய நில பிரமாண அளவில் 10%ஐ பொது வசதிகளுக்காக ஒதுக்கி, அந்த அளவை சரியான ஆக்கப் பத்திரமொன்றின் கீழ் அறனாயக பிரதேச சபைக்கு காணி உரிமையாளரினால் வெகுமதியாக அளித்தல் வேண்டும்.

*(10)* *இந்த துணை விதிகளின் கீழ் பதிவு செய்த விண்ணப்பதாரி,*

*(அ)* *அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் செயற்படுத்தப்படும் அதிகாரப் பிரதேசத்தினுள் காணி உப பிரிவாக்கலுக்கு உரிய உள்ளகப் பாதைகள், பிரதேச சபையின் திட்டமிடும் கமிட்டி ஒன்று அல்லது பௌதீக திட்டமிடல் கமிட்டியின் பரிந்துரைக்கு ஏற்ப, தலைவரினால் வழங்கப்படும் அறிவுரைக்கு ஏற்ப, சரியான நியதிகளுக்கு அமைவாக அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.*

*(ஆ)* *மழை நீர் வழிந்தோடும் உள்ளக வடிகான் தொகுதி பிரதான நீர் வழிந்தோடும் தொகுதியுடன் தொடர்புறும் வகையில் தலைவரினால் அளிக்கப்படும் அறிவுரைகளுக்கு ஏற்ப, அபிவிருத்தி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.*

*(இ)* *எல்லா காணித்துண்டுகளுக்கும் பொருத்தமாக உரிமை பெறும் வரையில், எந்தக் குழுவினருக்கும் தடை / பிரச்சினைகள் ஏற்படாதவாறு எஞ்சியுள்ள காணித்துண்டுகளை நடாத்திச் செல்லல் வேண்டும்.*

*(ஈ)* *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154 வது உறுப்புரை விடயங்களுக்காக காணித்துண்டுகளை விற்பதற்கு உரிய கவனயீர்ப்பு தொடர்பாக செயலாளருக்கு தகவல் வழங்கு வேண்டும்.*

*(11)* *காணி உப பிரிவாக்கலுக்கு உரிய 1915 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வீடுகள் அமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் தலைவரினால் அநுகூல சாதகமான உறுதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட பின்னர், அதற்குப் பொருத்தமான உப பிரிவுகள் தொடர்பாக, பிரதேச சபையின் திட்டமிடுதல் கமிட்டியின் அல்லது பௌதீக திட்டமிடல் கமிட்டியின் பரிந்துரை அறிக்கையின் சான்றிதழ் பிரதியொன்றுடன் தலைவரினால் அநுகூலச் சாதகமான சான்றிதழ் பத்திரம் விநியோகிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வார காலத்திற்குள் பிரதேச சபை செயலாளரினால் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.*

*(12)* *இந்த துணை விதிகளின் கீழ் பதிவு செய்வதற்காக, விண்ணப்பித்த ஒருவரினால், உப பிரிவாக்க திட்டத்திற்கு உரிய அநுகூல சான்றிதழ் பெற்றதன் பின்னர், அதன் உறுதிச் சான்றிதழ் பிரதி ஒன்று, முற்பணம் பெற்றுக் கொள்வதற்காக, மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரிடம் விண்ணப்பிக்க முடியும் என்பதோடு, மாவட்ட உள்ளூராட்சிமன்ற, உதவி ஆணையாளரினால், குறிப்பிட்ட காணி உப பிரிவு தொடர்பு சரியான முறையில் செயலாற்றுகைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதனால் திருப்தியடைந்து உரிய வைப்புப் பணத்தை விண்ணப்பதாரியின் வேண்டுகோளுக்கு இணங்க பெற்றுக் கொடுக்குமாறு தலைவருக்கு அறிவுரை வழங்கப்படுதல் வேண்டும்.*

*(13)* *விண்ணப்பதாரி அநுகூலத்தன்மைக்கு தகுதியில்லாத போது, மற்றும் அதற்கு ஏற்ப, விண்ணப்பதாரி மூலமே தானாக விண்ணப்பததை மீளப் பெற்றுக் கொள்ளலின் போது, மேலே 12 வது உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டிருப்பது போல, முன் வைப்புப் பணம் விண்ணப்பதாரியின் வேண்டுகோளுக்கு இணங்க மீளப் பெற்றுக் கொடுப்பதோடு, அதற்கு அமைவாக உரிய பதிவு நீக்கப்படுதல் வேண்டும்.*

*(14)* *இந்த துணை விதிகளின் கீழ் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தவரினால் முன் வைப்புப் பணம், முன்வைப்புச் செய்த தினத்தில் இருந்து 3 வருட கால எல்லைக்குள் மேலே குறிப்பிட்ட 12 வது உறுப்புரை அல்லது 13 வது உறுப்புரையின் கீழ் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு முடியாது போகுமிடத்து அந்தப் பணத்தை பிரதேச சபை நிதியத்தின் வருமானத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.*

*(15)* *இந்த துணை விதியின் எவ்வாறேனும் அல்லது விதி விளக்குகளை, மீறுதல், அல்லது தடுத்தல் குற்றம் ஆவதோடு, குற்றம் தொடர்பாக சரியான அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஒன்றினால் அந்த குற்றத்திற்குள்ளானவர் குற்றவாளியென நிரூபிக்கப்படும் இடத்து நியமிக்கக் கூடிய உச்ச தண்டனை மற்றும் அதை மீறுதல் அல்லது மேலும் அந்த விதி விலக்குகளை மீறுதல், மாறுசெய்தல் போன்றவற்றைத் தொடர்ந்து மேலும் அழைத்து வருமிடத்து அதனைப் பற்றி குற்றம் சும்தப்பட்டதன் பின்னர், அல்லது அந்த விதி மீறல்களைப் பற்றி தலைவரினால் கவனம் கொள்ளப்பட்டு, அல்லது வேறும் அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவரினால் எழுத்திலான அறிவித்தல் ஒன்று ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், மீறுதல் அல்லது மாறு செய்தல் மேலும் தொடர்ந்து செய்து வருவதாயின், மீறும் ஒவ்வொரு நாளுக்கும் நியமிக்கக் கூடிய மேலதிக தண்டணையின் உச்ச முறைமையிலான 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் சட்டத்தின் 122 வது உறுப்புரையின் (2) வது உப உறுப்புரையில் நியமிக்கப்பட்டுள்ள உச்ச தண்டப்பணம் மற்றும் மேலதிக தண்டனையின் உச்ச நிலையாதல் வேண்டும்.*

(16) இந்தத்துணை விதிகளின் கீழ் இரண்டு சந்தர்ப்பங்களில் குற்றவாளியாகும் குற்றவாளிக்கு அறனாயக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அவ்விடயம் தொடர்பாக அயோக்கியன் என கெட்ட தந்திரகாரன் என ஆவணப் படுத்தப்படுதல் வேண்டும்.

(17) சொற்கள் தொடர்பாக அண்மை அர்த்தம் அவசியமாகும் போது தலைவர் என்பவர் அறனாயக பிரதேச சபைத் தலைவர் எனவும், செயலாளர் என்பவர் அறனாயக பிரதேச சபை செயலாளர் எனவும் விண்ணப்பதாரி என்பவர் ஏதேனும் காணி ஒன்று தொடர்பாக உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக முன்வரும் அபிவிருத்தியாளர் எனவும் கருத்து விளக்கப்படுகின்றது.

(18) இந்த துணை விதிகளின் தமிழ்மொழி மற்றும் ஆங்கில மொழிக் கருத்து பிரதிகள் தொடர்பாக பொருத்தமற்றதாகக் காணப்படின், சிங்கள மொழிப் பிரதிகள் ஏற்புடையதாகும்.

**1 ஆம் அட்டவணை**

காணித்துணைப் பிரிவிடுதல்கள் தொடர்பில் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரியின் பெயர்/ கம்பனியொன்றாயின் கம்பனியின் பெயர் :
2. விண்ணப்பதாரியின் முகவரி :
3. விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை இல. :
4. விண்ணப்பதாரியின் தொலைபேசி இல. : மின்னஞ்சல் முகவரி :
5. விண்ணப்பதாரியின் காணியின் உரிமையாளரா அல்லது அபிவிருத்தியாளரா என்பது பற்றி :
6. விண்ணப்பதாரி உரிமையாளராகாத சந்தர்ப்பமொன்றில் உரிமையாளரின் பெயர், முகவரி :
   (விண்ணப்பதாரிக்கும் உரிமையாளருக்கும் இடையில் பணி தொடர்பில் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் பிரதியொன்றை இணைத்திருத்தல் வேண்டும்.
7. காணி அமைந்துள்ள மாவட்டம் :
8. பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் :
9. கிராம அலுவலர் பிரிவு :
10. தொடர்புடைய காணி உறுதியின் இலக்கம், சட்டத்தரணியின்/ நொத்தாரிசின் பெயர் :
    (பிரதியொன்று இணைக்கப்படுதல் வேண்டும்)
11. தொடர்புடைய திட்டப்படத்தின் இலக்கம் :
12. காணிகளைத் துண்டுகளாகப் பிரிவிடுவதற்கு எதிர்பார்க்கும் துண்டுகளின் எண்ணிக்கை :
13. முதற் பதிவா அல்லது முன்னர் பதிவு செய்து கொண்டதா ?:
14. சப்பிரகமுவ மாகாணத்திற்குள் இதற்குமுன் காணிகளைத் துணைப் பிரிவிடல் செய்து இருத்தல் தொடர்பிலான அனுபவம் (கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள்) ஆண்டு.

பிரதேச சபை.
காணியின் பெயர்,
காணியின் விஸ்தீரணம்,

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

EOG 07 - 0058

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.